1978 ஆகஸ்ட் 31]

திரு. துரை முத்துசாமி : ஒரு இரங்கற் தீர்மானம் கொண்டு வரலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கலாம், ஒழுங்குப் பிரச்னையாக கிளப்பக் கூடாது. எழுத்து மூலம் உறுப்பினர்களால் தரப்பட்டு அதை நான் பரிசீலனை செய்யவில்லையென்றால் இங்கு ஒழுங்குப் பிரச்சினையாக கொண்டுவரலாம். உறுப்பினர் அவர்களால் விதி 42, விதி 41-ன் கீழ் தரப்பட்டதை ஆலோசனைக்கு வைத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அப்படியிருக்க இப்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

(3) தகவல் கோரல்.

தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது குறித்து.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் கோட்டையில் இருக்கக்கூடிய கொடிக்கம்பத்தில் கொடி அரைக்கம்பத்தில் பறக்கிறது. காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திற்கு முன்னால் அவசரப்பட்டு கேட்பது என்றால் என்ன செய்வது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கென்யா நாட்டு அதிபர் கென்யாட்டா அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பது குறித்து, நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் அனுதாபம் தெரிவிக்கிற வகையில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்து கொண்டிருக்கிறது. வேறு ஒன்றும் காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பைகாரா அணைக்கட்டில் மின்சார உற்பத்தி.

*வினா 1— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள பைகாரா அணைக்கட்டில் இருந்து வெளிவரும் தண்ணீரைக் கொண்டு மின்சார உற்பத்தி செய்ய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் தொடங்கும்?